# ஒட்டாவா கார்ல்டன் தமிழ்ப்பள்ளி
## 168 கிரீன்பேங்க் சாலை ஒட்டாவா
### தொலைபேசி எண் 613-828-4587

www.ottawatamilschool.org

எங்களது அன்பான பெற்றோர்களுக்கு

புது வருட வாழ்த்துக்கள்!! பொங்கல் வாழ்த்துக்கள் !!
2007/2008 கல்வியாண்டு ஆக்கபூர்வமாக, நிறைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

***தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து***
***மன்னுயிர்க் கெல்லாம் இனிது*** – என்ற திருவள்ளுவர் வாக்குக்கு இணங்க,

தங்களைக் காட்டிலும் தமது மக்கள் அறிஞராகவும் சான்றோராகவும் வளர்ந்து சமுதாயத்திற்கு இனியவர் ஆக வேண்டும் என்ற தங்களது எண்ணத்திற்குத் துணையாக, நமது தமிழ்ப்பள்ளி தமிழ் மொழியுடன் தமிழ்ப் பண்பாடு, கலாசாரம், வரலாறு,மரபு அனைத்தையும் கற்றுத் தந்து அப்பெருமையை நிறைவேற்றும் என நம்புகிறோம்.

தமிழ்ப்பள்ளியின் வளர்ச்சிக்கும், தேர்ச்சிக்கும், தகுதிக்கும், முத்திரையாக நமது பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை வருடாந்தரப் பள்ளிலும் கோடைக்காலப் பள்ளியிலு அதிகரித்துள்ளது. அவ்வாறே தமிழ் உயர்கல்வி **(Tamil Credit Course)** பாடமும் இவ்வருடம் செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**மே 31ம்** தேதி தமிழ்ப்பள்ளி தன் 19வதுஆண்டுவிழாவை கொண்டாடவுள்ளது. இத்தேதியைத் தவறாமல் தங்களது நாட்காட்டியில் குறித்து வைத்துக்கொள்ளவும். மாணவ மாணவியர் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுவதால் அவர்கள் தவறாமல் பள்ளிக்கு வந்து பயிற்சிகள் எடுப்பது அவசியம்.

இந்த விழாவுடன் இதர செலவுகளுக்கும் ஒவ்வொரு மாணவரும் $10 அளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம். இத் தொகையை மாணவர்கள் தங்களது ஆசிரியர்களிடம் பெப்ரவரி மாத இறுதிக்குள் தரும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.
(வருட ஆரம்பத்தில் நீங்கள் அளித்த $10 கல்வி இலாகா நிர்வாகத்திற்கு செலுத்தப்பட்டது)

மீண்டும் எங்கள் நன்றியையும் வாழ்த்துக்களையும்
தெரிவித்துக்கொள்கிறோம்.

கற்பித்தற் பணியில் என்றென்றும் உங்களுடன்
தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள்,

| | |
|---|---|
| கஸ்தூாி பிரபாகரன் | 613-843-0456 |
| ஜெகா நளன் | 613-260-7151 |
| யசோதா தயாபரன் | 613-271-9084 |
| ஜெயா கணேசமுர்த்தி | 613-825-9918 |
| மலர் ஜெயபாலசிங்கம் | 613-271-8209 |
| மைதிலி கல்யாணசுந்தரம் | 613-599-0690 |
| சுசிலா முர்த்தி | 613-726-9291 |